## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. DVC.4/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சந்தியா | Prosecution | PW–1 Cross Continuation |
| Husband Name | சரபோஜி | Court | JM, Court, Sirkali. |
| Village | நத்தம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 39/2026 |

**Solemnly affirmed by Tmt. R. Geetha Grade –III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 28.01.2026.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எனது குழந்தைகளை என் தகப்பனார் ஊரில் உள்ள பள்ளியில் சேர்த்தது இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பா அல்லது பின்பா என்றால் முன்பே சேர்த்து விட்டேன். எதிர்மனுதாரரின் அனுமதி இல்லாமல் நானே செயின்ட் ஜோசப் பள்ளியில் படித்து வந்த எனது குழந்தைகளுக்கு TC வாங்கிக்கொண்டு வேறு பள்ளியில் சேர்த்து விட்டேன் என்றால் நான் இது நாள் வரை TC வாங்கவில்லை. அந்த சமயத்தில் நாங்கள் இருவரும் பிரிந்து இருந்ததால் நான் அவருடைய சம்மதத்தை கேட்கவில்லை. நான் இந்த மனுவில் எனது குழந்தைகளின் மருத்துவ, படிப்பு மற்றும் அன்றாட செலவுகளுக்கு பணம் கேட்டு எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் தவறு கேட்டுள்ளேன். பைபாஸில் இருந்த நிலத்திற்கு உண்டான இழப்பீடு தொகையை என் கணவர் எடுத்துக் கொண்டதாக சொல்லும் நிலையில், நான் அவருக்கு எதிராக வழக்கு ஏதேனும் தாக்கல் செய்து சட்ட நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் இல்லை. எனது பெயரில் உள்ள நிலத்திற்கு வேறு ஒரு நபர் இழப்பீடு வாங்க முடியாது என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. திருமணத்தின் போது எங்கள் வீட்டார் 13 ½ பவுன் நகைகள் போட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதற்கு சான்றாக நான் நகை ரசீதுகளோ அல்லது பஞ்சாயத்தார் முச்சலிக்காவோ தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல எங்கள் வீட்டார் சீர்வரிசை சாமான்கள் வாங்கிக் கொடுத்ததற்கு சான்றாகவும் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் ஆதாரம் ஏதும் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. கல்யாண வீடியோவை பார்த்தால் உண்மை தெரியும். அந்த வீடியோ பதிவுகளும் என்னிடம் கிடையாது. ஒரு ஏக்கர் நிலத்தை நான் எனது நகைகளை அடமானம் வைத்து வாங்கியதாக சொல்லும் நிலையில் இன்றைய தேதியில் அந்த நிலத்தின் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்லும் நிலத்திற்கு இழப்பீடு தொகையாக ரூ.13,60,000/– எனது வங்கிக் கணக்கிற்கு அரசாங்கத்தால் செலுத்தப்பட்டுள்ளது என்றால் தவறு. எனக்கு அவ்வளவு பணம் வரவில்லை. சுமார் ரூ.4,00,000/– மட்டுமே வந்தது. முதல் தவணையாக எனக்கு ரூ.1,50,888/– ரூபாய் செலுத்தப்பட்டது என்றால் தவறு. அந்த பணத்தை என் கணவர் தான் வாங்கிக் கொண்டார். அது எங்கள் இருவருடைய joint account வங்கி கணக்கு ஆகும். நான் வீட்டில் இல்லாத போது அவர் பணத்தை எடுத்துக் கொண்டார். சீர்காழி தேசிய நெடுஞ்சாலைத்துறை நகரப் பிரிவிலிருந்து எனது பெயரில் உள்ள பத்திரத்திற்கு எனது கிராம வரிசையின் படி 48வது வரிசை எண்ணாக எனது பெயர் குறிப்பிட்டுள்ளது என்றாலும் மேற்படி பதிவேடுகளின் படி எனது கணக்கிற்கு தான் பணம் வந்துள்ளது என்றாலும் பணம் எனது வங்கி கணக்குக்கு வந்தது உண்மைதான். முதல் தவணை எங்கள் இருவரின் கூட்டு வங்கி கணக்கிருக்கும் இரண்டாவது தவணை என்னுடைய தனி பெயரில் உள்ள வங்கி கணக்கிருக்கும் வழங்கப்பட்டது.

3. எனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு என்றால் சரிதான். நான் என் கணவர் எனக்கு கட்டிய திருமாங்கல்யத்தை திருநின்றியூர் மாரியம்மன் கோவில் உண்டியலில் செலுத்தி விட்டேன் என்றால் தவறு. கொரோனா காலகட்டத்தில் எனக்கு பொருளாதார ரீதியாக கஷ்டம் ஏற்பட்டதால் நான் அந்த மாங்கல்யத்தை அடகு வைத்துள்ளேன். அதற்கு சான்றாக ரசீது ஏதேனும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். உண்மையில் நான் அந்த மாங்கல்யத்தை உண்டியலில் போட்டு விட்டேன் என்றாலும் அது பற்றி எனது கணவர் கேட்டதற்கு தான் நான் அவரோடு சண்டை செய்து கொண்டு எனது குழந்தைகளை அழைத்துக் கொண்டு எனது பெற்றோர் வீட்டுக்கு சென்று விட்டேன் என்றாலும் சரியல்ல. அதற்குப் பிறகு என் கணவரை பழி வாங்குவதற்காக சமூக நலத் துறையில் பொய்யாக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு கணவர் என்கிற முறையிலும் எனது குழந்தைகளுக்கு தகப்பன் என்கிற முறையிலும் இந்த மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பும் சரி பின்பும் சரி என் மீது உள்ள

நம்பிக்கையினால் தான் அவர் மேல் உள்ள பொது அதிகாரத்தின் அடிப்படையில் சொத்தை என் பெயரில் எதிர் மனுதாரர் எழுதி வைத்தார் என்றாலும் அதன் மூலமாக வரும் இழப்பீட்டுத் தொகையை நான் பெற்றுக் கொள்வதை இன்று வரையிலும் அவர் கேட்காமல் இருப்பதற்கு காரணமே தனது மனைவி மற்றும் குழந்தைகள் அதில் வரும் வருமானத்தைக் கொண்டு ஜீவனம் செய்து வரட்டும் என்பதால் தான் என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் சொல்லி உள்ளது போல வன்கொடுமை எதுவும் எனக்கு நடைபெறவில்லை என்றாலும் என் கணவர் குடும்பத்தை பழிவாங்க வேண்டும் என்பதற்காகவும் அவரோடு சேர்ந்து வாழக்கூடாது என்பதற்காக முதலில் விவாகரத்து மனுவை தாக்கல் செய்துவிட்டு அடுத்ததாக இந்த பொய் வழக்கையும் தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல. முகந்திரமே இல்லாத என்னுடைய இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**